முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA1 பரீட்சை – 2016 சனவரி

## (AA15) வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்

(Business Operations and Management)

2016-02-07
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**
  (1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
  *எழுதுதல் - 03 மணித்தியாலங்கள்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***
  (3) *பரீட்சைக்கு விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே*** *உங்களுக்குத் தரப்பட்ட* ***விடைப் புத்தகத்தில் விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்க. ஏதாவது எடுகோள்களை மேற்கொண் டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) ***செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு வினைச் சொல் உள்ளடங்கியிருக்கிறது. (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (6) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.16** வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடைக்குரிய இலக்கத்தை வினாவுக்குரிய இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பணி இலக்கு (Mission) என்ற பதத்தை பின்வருபவைகளுள் எது சிறப்பாக விபரிக்கின்றது?

(1) எமது இலக்கு என்ன மற்றும் நாம் என்ன செய்கின்றோம் என்னும் வினாவுக்கு பணியிலக்கு விடையளிக்கிறது.

(2) நிறுவனத்தின் எதிர்காலத்தைப் பற்றி பணியிலக்கு விபரிக்கிறது.

(3) வியாபாரத்தின் நோக்கம் மற்றும் பெறுமதி ஆகிய இரண்டையும் பணியிலக்கு தெரிவிக்கின்றது.

(4) நிறுவனத்தின் இருப்புத் தன்மைக்கான (existence) காரணத்தைப் பணியிலக்கு விபரிக்கின்றது.

(02 புள்ளிகள்)

**1.2** பின்வருபவைகளுள் முகாமைத்துவத்தின் ஒரு அடிப்படைக் கோட்பாடு **அல்லாதது** எது?

(1) வினைத்திறன் (2) விளைவுத்திறன் (Effectiveness)

(3) உற்பத்தித்திறன் (4) நிச்சயமற்ற தன்மை(Uncertainty)

(02 புள்ளிகள்)

**1.3** உற்பத்தித்திறன் (Productivity) என்னும் பதத்தைச் சரியாக விளக்குவது பின்வருபவைகளுள் எது?

(1) உற்பத்தித்திறன் $= \dfrac{\text{அடைந்த நோக்கங்கள்}}{\text{திட்டமிட்ட நோக்கங்கள் அடைவு}}$

(2) உற்பத்தித்திறன் $= \dfrac{\text{மொத்த உள்ளீடு}}{\text{மொத்த வெளியீடு}}$

(3) உற்பத்தித்திறன் $= \dfrac{\text{பயன்படுத்தப்பட்ட வளங்கள்}}{\text{ஒதுக்கப்பட்ட வளங்கள்}}$

(4) உற்பத்தித்திறன் $= \dfrac{\text{மொத்த வெளியீடு}}{\text{மொத்த உள்ளீடு}}$ (02 புள்ளிகள்)

**1.4** காப்புறுதிப்பத்திரம் வைத்திருக்கும் ஒருவருக்கு எந்தவொரு மேலதிக இலாபமும் தவிர்க்கப்படுவது எந்தத் தத்துவத்தின் அடிப்படையில்?

(1) பங்களிப்புத் தத்துவம் (Contribution)

(2) கடன் பற்றுரிமை மாற்றிடல் தத்துவம் (Subrogation)

(3) இழப்பீட்டுத் தத்துவம் (Indemnity)

(4) மீயுயர் நன்னம்பிக்கைத் தத்துவம் (Utmost good faith) (02 புள்ளிகள்)

**1.5** மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களாக (policy interest rates) **உட்படுத்தப்படாதது** பின்வருபவைகளுள் எது?

(1) வங்கி வட்டி வீதம்

(2) மறுதலை மீள்கொடுப்பனவு வீதம் (Reverse-repo rate)

(3) மீள்கொடுப்பனவு (Repo rate)

(4) சட்டநியதி ஒதுக்கு வீதம்

(02 புள்ளிகள்)

**1.6** வெளிநாட்டு வர்த்தகத்தின் ஆக்கக்கூறுகளாகக் கருதப்படும் குழு பின்வருபவைகளுள் எது?

(1) இறக்குமதியும் மொத்த விற்பனையும் (2) மொத்த விற்பனையும் ஏற்றுமதியும்

(3) ஏற்றுமதியும் இறக்குமதியும் (4) சில்லறை மற்றும் மொத்த விற்பனை

(02 புள்ளிகள்)

**1.7** “PEST” பகுப்பு பரிசீலிப்பது,

(1) வியாபாரத்தைப் பாதிக்கக்கூடிய அகச் சூழல் மற்றும் அகச் சூழல் காரணிகளை

(2) வியாபாரத்தைப் பாதிக்கக்கூடிய புறச் சூழல் மற்றும் பூகோளரீதியான காரணிகளை

(3) வியாபாரத்தைப் பாதிக்கக்கூடிய நுண்பாக சூழல் மற்றும் பேரண்ட சூழல் காரணிகளை

(4) வியாபாரத்தைப் பாதிக்கக்கூடிய நுண்பாகச் சூழல் மற்றும் அகச் சூழல் காரணிகளை

(02 புள்ளிகள்)

**1.8** பணிச் சூழலின் ஆக்கக்கூறு (component of task environment) **அல்லாதது** பின்வருபவைகளுள் எது?

(1) வாடிக்கையாளர் (2) போட்டியாளர்கள்

(3) உள்ளக முகாமைத்துவம் (4) வழங்குநர்கள் (02 புள்ளிகள்)

**1.9** உள்ளீட்டு மூலப்பொருட்களின் (Input Materials) பெறுகை (receiving), களஞ்சியப்படுத்தல் (warehousing), தொக்குக் கட்டுப்பாடு ஆகியன போட்டரின் பெறுமதிச் சங்கிலியில் (Porter’s Value Chain) எவ்வாறு அடையாளங் காட்டப்பட்டுள்ளது?

(1) வெளிச்செல்லும் லொஜிஸ்ரிக்ஸ் (Outbound logistics)

(2) ஆதரவுச் செயற்பாடுகள் (Supportive activities)

(3) சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகள் செயற்பாடுகள்

(4) உள்வரும் லொஜிஸ்ரிக்ஸ் (Inbound logistics) (02 புள்ளிகள்)

**1.10** 5S மாதிரியின் ஒரு தூணாக (Pillar) **அமையாதது** பின்வருபவைகளுள் எது?

(1) பொருத்தப்பாடு (Suitability) (2) பிரகாசம் (Shine)

(3) நிலைத்திருத்தல் (Sustain) (4) தரப்படுத்தல் (Standardize)

(02 புள்ளிகள்)

**1.11** ஊழியர் தெரிவு (employee selection) தொடர்பாக உண்மையான கூற்று பின்வருபவைகளுள் எது?

(1) தெரிவானது, நிறுவனத்திற்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளின் குழாமை உருவாக்குகின்றது.

(2) தெரிவானது, நிறுவனமொன்றின் மனித வளங்களை உந்தூக்குவிப்பதற்குப் (motivate) பொறுப்பாகவுள்ள ஒரு தொழிற்பாடாகும்.

(3) தெரிவானது, பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான பரீட்சார்த்தியை கண்டுபிடிக்கின்றதொரு முறைமைசார் செயல்முறையாகும். (systematic process).

(4) தெரிவானது, தந்திரோபாய இலக்குகளை (strategic goals) அடைவதற்கு நிறுவனத்திற்கு தேவைப்படும் மனித வளங்களைத் தீர்மானிக்கின்றது. (02 புள்ளிகள்)

**1.12** பின்வருவனவற்றுள் எந்தச் செயற்பாடு தரவினை தகவலாக **மாற்றாது**?

(1) முரண்களைளப் பகுப்பாய்வு செய்தல் (Analyzing Variances)

(2) வேறுபட்ட சமன்பாடுகளைக் கணிப்பிடுதல் (Calculating various equations)

(3) பதிவுகளை கோப்பிடுதல் (Filing of records)

(4) எண் பெறுமதிகளின் வேறுபாட்டை ஒப்பிடுதல் (Compare difference of figures) (02 புள்ளிகள்)

**1.13** மெண்டெலொவ் இன் தாயத்துக்கிணங்க (Mendelow's Matrix) உயர் மட்ட நாட்டம் மற்றும் அதிகாரத்தைக் கொண்டுள்ள நாட்டதாரர்கள் (stakeholders) எவ்வாறு காட்டப்பட்டுவர்?

(1) குறைந்தபட்ச முயற்சி (Minimum effort)

(2) தகவலுறுத்தப்படல் (Keep informed)

(3) பிரதான பாத்திரம் வகிப்போர் (Key Players)

(4) திருப்தியடைவோர் (Keep satisfied) (02 புள்ளிகள்)

**1.14** நிறுவனமொன்றுக்கு பதவியில் அறிமுகப்படுத்தல் (Induction) முக்கியமாவதற்கான காரணம்,

(1) அனைத்து ஊழிய அங்கத்தினருக்கும் பொருத்தமான பயிற்சியை வழங்குவதற்கு

(2) சகல புதிய ஊழிய அங்கத்தினருக்கும் பொருத்தமான பயிற்சியை வழங்குவதற்கு

(3) கம்பனியால் சமூகத்திற்கு வழங்கப்படும் புதிய சேவைகளை அறிமுகம் செய்வதற்கு

(4) கம்பனியால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் புதிய சேவைகளை அறிமுகம் செய்வதற்கு

(02 புள்ளிகள்)

*இல.**1.15** முதல் **1.20** வரையுள்ள பின்வரும் கூற்றுக்கள் **சரியானவையா** அல்லது **தவறானவையா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவுசெய்த விடையை (சரி / தவறு) உங்கள் விடைப்புத்தகத்தில் வினாவுக்குத் தரப்பட்ட இலக்கத்துடன் எழுதுக.*

**1.15** பேரண்டச் சூழலின் ஆக்கக்கூறுகள் நேரடியாக வியாபாரத்தினால் கட்டுப்படுத்த முடியாதவை.
(02 புள்ளிகள்)

**1.16** ஆரம்ப மூலதனம் ரூ. 1,000/- இலும் அதிகமாக இருந்தால் ஒரு பங்குடமையானது கட்டாயம் ஒரு எழுத்து மூல ஒப்பந்தத்தினைக் கொண்டிருக்க வேண்டும். (02 புள்ளிகள்)

**1.17** நாணயமாற்று வீதக் கட்டுப்பாடு (Exchange rate control) மற்றும் நிதிசார் முறைமை ஸ்திரப்படுத்தல் (financial system stabilization) ஆகியனவையே இலங்கை மத்திய வங்கியின் பிரதான குறிக்கோள்களாகும் (objectives). (02 புள்ளிகள்)

**1.18** காப்புறுதி பெறுபவரால் ஒரே ஆதனத்திற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காப்புறுதிக் கம்பனிகளில் காப்புறுதி செய்யப்படுவது, மீள் காப்புறுதி (re – insurance) என அழைக்கப்படும்.
(02 புள்ளிகள்)

**1.19** ஊழியர் பணி நிறுத்தங்கள் (Employee layoffs), பணி நீக்கங்கள் (terminations), பதவி தாழ்த்தல்கள் (demotion) மற்றும் ஓய்வுறல்கள் (retirements) என்பன ஊழியர் மிகை நிலவும்போது பயன்படுத்தப் படுகிற தந்திரோபாயங்களுள் சிலவாகும். (02 புள்ளிகள்)

**1.20** ஒழுக்க முகாமையானது (discipline management) நேர் உந்தூக்க நுட்பங்கள் மற்றும் மறையான உந்தூக்க நுட்பங்கள் ஆகிய இரண்டினையும் உள்ளடக்கும். (02 புள்ளிகள்)

*பகுதி A முடிவுற்றது*

## பகுதி B

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

''வியாபார நிறுவனங்களுக்கான தவிர்க்க முடியாத ஒன்றாக பூகோளமயமாக்கல் விளங்குகிறது. அது வியாபாரங்களுக்கு அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் தருகின்றது. அத்துடன் பூகோளமயமாக்கல் வர்த்தக நிறுவனங்களுக்கு சந்தர்ப்பங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் வழி திறந்துவிட்டுள்ளது''.

(a) பூகோளமயப்படுத்தலுக்கு ஆதார சேவைகள் (supportive services) எவ்வாறு வசதியளிக்கும் என்பதை **விளக்குக.** (06 புள்ளிகள்)

(b) ''பூகோளமயமாக்கலின்'' இரண்டு (02) சந்தர்ப்பங்களையும் இரண்டு (02) அச்சுறுத்தல்களையும் இனங்காண்க. (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

கேள்வியானது வழமையாக நிச்சயத்தன்மை (certainty) யுடன் தொடர்பற்றது. ஆதலால் கேள்விக்குரிய பொருட்களின் (goods demanded) சரியான கணியத்தினை கூறுவது சாத்தியப்படாததாகும். இருப்பினும், தொக்கு முகாமைத்துவத்தின் (inventory management) குறிக்கோளானது, வாடிக்கையாளரின் கேள்விக்கு முகங்கொடுக்கத்தக்கதாக போதுமான இருப்புகளை வைத்திருப்பதோடு கிரய விளைவுத்திறன் கொண்டதாக (cost effective) இருப்பதாகும். அல்லாமலும், தொக்கு என்பது கிரயத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு பகுதியாக ஒருபோதும் உணரப்பட்டிருக்கவில்லை.

(a) தொக்கு முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட அடிப்படைக் கிரயங்களை **விளக்குக.** (06 புள்ளிகள்)

(b) உலகம் முழுவதும் இன்றைய உற்பத்தி நிறுவனங்களால் பிரயோகிக்கப்படுகின்ற தொக்குக் கட்டுப்பாட்டு முறைமைகளில் இரண்டை (02)ப் பற்றி **விளக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 04

விற்பனை ஊக்குவிப்பு (Promotion) என்பது ஒரு உற்பத்தியைப் பற்றிய விழிப்புணர்வை உயர்த்துவதற்கு அல்லது ஒரு உற்பத்தியைக் கொள்வனவு செய்திட வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கும் ஒரு செயற்பாடாகும். விளம்பரப்படுத்தல் ஊக்குவிப்பின் ஒரு வடிவமாகும். ஆனால் எல்லா ஊக்குவிப்புகளும் விளம்பரங்கள் அல்ல.

(a) சந்தைப்படுத்தல் கலவை (marketing mix) மற்றும் ஊக்குவிப்புக் கலவை (Promotional mix) ஆகிய வற்றுக்கிடையிலான வேறுபாடுகள் இரண்டினை (02) **அடையாளங் காண்க.** (04 புள்ளிகள்)

(b) (i) ஊக்குவிப்புக் கலவையின் இரண்டு (02) கருவிகளை (tools) **அடையாளங் காண்க.** (02 புள்ளி)

(ii) மேலே (i) இல் அடையாளம் காட்டிய இரண்டு கருவிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு அனுகூலமும் ஒரு பிரதிகூலமும் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

அக இணையம் (intranet), புற இணையம் (extranet) மற்றும் இணையம் (internet) ஆகியவற்றின் தொழில்நுட்பப் பிரயோகங்கள் நவீன நிறுவனங்களால் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

(a) வியாபார நிறுவனமொன்றுக்கு அக இணையம், புற இணையம் மற்றும் இணையம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை **விளக்குக.** (06 புள்ளிகள்)

(b) வியாபார நிறுவனமொன்றுக்கு இணையத்தள பயன்பாடுகள் நான்கினைப் (04) பட்டியலிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிந்தது*

## **<u>பகுதி C</u>**

கட்டாய வினா ஒன்று (01)
(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**DEES** என்பது **Z** நாட்டிலுள்ள இரண்டாவது மிகப்பெரிய சுப்பர் மார்கட் ஆகும். அது உணவுப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்களை சில்லறை விலையில் விற்பனை செய்வதை மையப்படுத்திய நிறுவனமாகும். **DEES** ஆனது **Z** நாட்டில் உள்ள மிகப் பெரிய தொழில்தருநர்களில் ஒன்றாகவும் நாட்டின் கிராமிய, உபகிராமிய, நகரப் பிரதேசங்களிலிருந்து 5,000 இற்கு மேற்பட்ட ஊழியர்கள் தொழில்புரியும் இடமாகவும் விளங்குகிறது. இவை பல்தரப்பட்ட தொழில் வகிபாகங்களை அதன் சுப்பர் மார்க்கட்டுகள் மற்றும் பண்டகசாலைகளில் கொண்டுள்ளன. **Z** ஒரு உபசரணை மிக்க நாடாகும். இங்குள்ள மக்களுள் பெரும்பாலானோர் படித்தவர்களாகவும் கலாசாரப் பற்றுடையவர்களாகவும் சுய அவாவுடையவர்களாகவும் தனியார் மற்றும் அரச துறைகளில் தொழில் புரிபவர்களாகவும் உள்ளனர். இது வெப்ப வலய மற்றும் மிதமான காலநிலைகளைக் கொண்ட நாடாகும்.

ஒரு முன்னணி சில்லறை வியாபாரியாக வெற்றியடைய **DEES** நம்பிக்கை மிக்க தொழில்தருநராக இருக்க விரும்புகிறது. நிறுவனத்திலுள்ள தனது திறன்மிக்க பயிற்றப்பட்ட ஊழியர்கள் மீதே மிகச் சிறந்த வாடிக்கையாளர் சேவை முழுமையாக தங்கியுள்ளதென்பதை **DEES** நம்புகிறது. குழந்தைகள், பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய எல்லா வயதினர்க்கும் ஏற்ற அதன் புதிய உற்பத்தியான தைத்த ஆடைத் தொகுதியை அறிமுகம் செய்வதற்காக கம்பனி அண்மையில் யோர்க் நகரில் வியாபாரக் கண்காட்சி ஒன்றினை நடாத்தியது. அந்தக் கண்காட்சியில் கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO), "**DEES** தனது வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் சமூகத்தினருக்கு சரியானதைச் செய்வதற்கு நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றும்'' எனக் குறிப்பிட்டார்.

கம்பனியானது அதன் புதிய ஆடைத்தொகுதியை நேர்த் தொடர்பு வலையமைப்பினூடாக (via online) விற்பனை செய்வதற்கு வசதியளித்திடும் வகையில் புதிய பணிக்குழுவினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முடிவு செய்தது. **DEES,** முகநூல் (facebook) போன்ற சமூக ஊடக இணைப்புக்களையும் ஆட்சேர்ப்பு நிறுவனங்களையும் இதற்காகப் பயன்படுத்துகின்றது. புதிய வியாபாரப் பிரிவை நிறுவி முடித்து 3 மாதங்களின் பின்பு **DEES** சில மனித வள மற்றும் விற்பனைப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. பிரதானமாக அதன் செயற்பாட்டு மட்ட ஊழியர்களுடன் (staff) சில பிரச்சினைகளை சந்தித்தது. இந்த பிரச்சினைகள் காரணமாக **DEES** ஒரு குறிப்பிடத்தக்க ஊழியர் புரள்வு வீதத்திற்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

இந்த பிரச்சினைகள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக பணிப்பாளர் சபை ஒரு வெளிவாரி நிபுணத்துவ ஆலோசகரை பணிக்கமர்த்தியது. அண்மையில் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இதனை பிரதான அக்கறையுடைய விடயமாகவும் ஆலோசகரின் கண்டுபிடிப்புகள் பற்றியும் **DEES** இன் முகாமை கலந்துரையாடியது. அலுவலர் புரள்வுக்கான பிரதான காரணம் **DEES,** உரிய முறையில் பணியாற்றுவதற்குரிய பொருத்தமான திறன்களையுடைய ஊழியர்களை சரியான முறையில் ஆட்சேர்ப்பு செய்யவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது. ஆதலால் சரியான ஆட்சேர்ப்புத் திட்டத் தெரிவு முறைமையைக் கொண்டிருக்க வேண்டிய தேவைப்பாடு, முகாமைத்துவத்தால் ஒரு முக்கிய அக்கறையாக கவனத்தில் கொள்ளப்பட்டது. அத்துடன் விற்பனையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான காரணம் இலக்கு சந்தைகள் / பிரிவுகள் மற்றும் அவற்றின் தேவைகள் சரியாக அடையாளம் காணப்படாமையே என இனம் காணப்பட்டது.

***நீர் செய்ய வேண்டியது,***

**(a)** **DEES** இற்குப் பொருத்தமான சரியான ஆட்சேர்ப்புப் படிமுறையை **விபரிக்குக.** (12 புள்ளிகள்)

**(b)** புதிய ஆடை உற்பத்தித் தொகுதியை விளைதிறனுடன் விற்பனை செய்வதற்கு **DEES** இற்கு கிடைக்கக்கூடிய பிரிவாக்க (segmenting) தந்திரோபாயங்களை **ஆராய்க.** (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிந்தது*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |